18 ஜுன், 2015

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

*இனிமையான மலர் போன்ற குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தை அவரது அனைத்து வழிமுறைகள் மற்றும் இரகசியங்களை விளக்குவதை நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். முக்கியமான விஷயம் தந்தையை நினைவு செய்வதாகும். தூய்மையானவரான தந்தை உங்கள் முன் அமர்ந்துள்ளார். அவர் மிகவும் பணிவானவர். இவர் எந்த அகங்காரமுமின்றி மிகவும் எளிமையாக வாழ்கிறார். பாப் மற்றும் தாதா இருவரும் குழந்தைகளாகிய உங்களுக்கு சேவையாளர்கள். உங்களுக்கு இரண்டு சேவகர்கள் உள்ளனர்.: உயர்ந்ததிலும் உயர்ந்த சிவ்பாபா, மற்றும் பிரஜாபிதா பிரம்மா.*

இனிமையான பாபா, நாள் பொழுதில், தூய்மையானவரான நீங்கள் என் முன்னால் அமர்ந்துகொண்டுள்ளீர்கள் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்வேன். நீங்கள் மிகவும் எளிமையாக இருப்பதோடு கிடைப்பவராகவும் இருக்கிறீர்கள். நான் மீண்டும் மீண்டும் என் வாழ்க்கையில் நீங்கள் ஈடுபாடு கொண்டிருப்பதை நினைவு செய்கின்றேன். நீங்கள் எளிமையாகவும் அகந்தையின்றி, வாழ்கின்றீர்கள், நானும் அதையே செய்ய வேண்டும்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

*பாபா ஆத்மாவிற்கு: குழந்தைகளாகிய நீங்கள் 21 பிறவிகளுக்கு உங்களை சிவ்பாபா சந்தோஷமடைய செய்கின்றார் என்பதால் உக்களுக்குள்ளே மிகவும் திருப்தியாக இருக்க வேண்டும்; நீங்கள் அப்படிப்பட்ட தந்தையிடம் உங்களை நீங்கள் சரண்னடைய வேண்டும். இங்கே, நீங்கள் மிகவும் அன்புக்குரியவர் ஆக வேண்டும். யாருக்கும் துன்பம் ஏற்படுத்தக்கூடாது. இரக்கமுடைய குழந்தைகளாகிய நீங்கள் ஒவ்வொரு கிராமத்தில் சென்று சேவையாற்றுவதற்கான ஆசையை உங்கள் இருதயங்களில் வைத்திருக்க வேண்டும்.*

நான் திருப்தியான மனோபவத்தை ஏற்பதில் உறுதியாக இருக்கிறேன். பாபாவுடன் நான் கொண்டிருக்கும் இந்த திருப்தியான மனோபாவம் நான் சந்திக்கும் அனைவரோடும் என்னை பகிர்ந்து கொள்ள தூண்டுகின்றது. அது இதயத்திலிருந்து சேவை செய்வதற்கான என் ஆசையை தூண்டுகிறது.

திரிஷ்டி அல்லது தூய பார்வை

*பாபா ஆத்மாவிற்கு: நீங்கள் சிவ சக்திகள் என புகழப்படுகின்றீர்கள். தந்தை அனைவருக்கும் சேவை செய்து அவர்களைப் தூய்மையாக்குவதுபோல், அதே*

*வழியில், அதை செய்வதன் மூலம் நீங்கள் அவரது உதவியாளர்கள் ஆகுங்கள். தந்தை கூறுகிறார்: நீங்கள் இப்போது உங்கள் எண்ணங்கள், சொற்கள் மற்றும் செயல்கள் மூலம் அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுக்க வேண்டும். அனைவருக்கும் மகிழ்ச்சியான நிலத்தின் வழியை காட்டுவதே உங்களுடைய தொழிலாகும்.*

இன்று என்னுடைய திருஷ்டியில், நான் பாபாவினுடைய உதவியாளராக , ஒரு சிவ சக்தியாக என்னை பார்க்கிறேன். நான் என் திருஷ்டி மூலம் மகிழ்ச்சியை பரப்புகின்றேன். நான் என் திருஷ்டி மூலம் சந்தோஷதாமத்திற்கு வழி காட்டுகின்றேன்.

**ஒர் அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.